# பாரதியார் கவிதைகளில் புலப்படும் சமகாலச் சமூகம்

# Contemporary Society Reflected in Bharathiar's Poems

**முனைவர் இரா. செங்கோட்டுவேல்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
கருப்பண்ணன் மாரியப்பன் கல்லூரி
செட்டியார்பாளையம், முத்தூர்
திருப்பூர் மாவட்டம்

**Dr. R. Sengottuvel**
*Assistant Professor*
*P.G. Tamil and Higher Studies*
*Karuppannan Mariyappan College*
*Chettiarpalayam, Muttur*
*Tiruppur district*

## ஆய்வுச் சுருக்கம்

*இருபதாம் நூற்றாண்டில் இணையற்ற கவிஞராகிய பாரதியார் 39 வயதுக்குள் ஒரு முழுமையான வாழ்க்கையை வாழ்ந்தவர். பாரதியின் சிந்தனைகள் நேற்றோடும் காற்றோடும் கரைந்து போகக்கூடியவை அல்ல. கடலும் மலையும் உள்ளவரை வானும் மண்ணும் உள்ளவரை நிலைத்து நின்று சமுதாயத்திற்கு வழிகாட்டுவதாக அமைந்துள்ளது. நூறு வயது வாழ்ந்தவர்களும் அனுபவிக்க முடியாத பல அற்புதங்களையும் அதிசயங்களையும் சமுதாய சீர்கேடுகளை எல்லாம் அனுபவித்தவர். கவிதையானது தமிழருக்கு கைவந்த கலையாகும். பிறப்பு முதல் இறப்பு வரை தமிழர்களின் ஒவ்வொரு உணர்ச்சியும் கவிதையாய் உருவெடுத்து வெளிவந்தன. இருபதாம் நூற்றாண்டில் இந்திய நாடு எங்கும் மண்டிக் கிடந்த அடிமைத்தனம் என்னும் இருளை அகற்ற எழுந்த ஆதவன் பாரதியார் ஆவார் இவர் ஒரே நேரத்தில் இருவிதப் போரை நடத்திக் கொண்டிருந்தார். வெள்ளையர்களை எதிர்த்து வீரமுரசு கொட்டினான் மற்றொரு முனையில் நின்று விலங்கினும் கீழாய் வாழ்ந்த இந்திய மக்களை வீழ்த்தி வெற்றி கொண்டிருந்த அச்சம், மடமை, அடிமைத்தனம் ஆகிய பேய்களை அழித்தொழிக்க ஆவேசத்தோடு போரிட்டான். இந்த இருவித பொருளையும் நடத்த அவன் ஏந்தி*

## Abstract

*An unparalleled poet of the twentieth century, Bharathiyar lived a full life by the age of 39. Bharathi's thoughts cannot dissolve with yesterday and wind. As long as there is sea and mountains, as long as there is sky and earth, it will stand and guide the society. He had experienced many miracles, wonders and social evils that even those who lived to be 100 years old could not experience. Poetry is the art of the Tamils. Every emotion of the Tamils from birth to death. He beat the drum against the whites, and at the other end fought furiously to exterminate the demons of fear, stupidity and slavery that had conquered the inferior Indian people. There are only two weapons he wields to handle these two things. One is poetry and the other is prose. Bharathi thinks about the individual and reveals many truths about the relationship between the individual and society in his songs. He expressed the Indian culture, religion, art and literature of his time through his poetry. Mahakavi was the first to introduce modernity in Tamil poetry. Living in a country with an ancient culture, Bharathi has thought a lot about social and cultural development in our poems. This essay may*

ஆயுதங்கள் இரண்டே ஆகும். ஒன்று கவிதை மற்றொன்று உரைநடையாகும். தனி மனிதனைப் பற்றி சிந்தித்தவர் பாரதி தனி மனிதனுக்கும் சமூகத்திற்கும் உள்ள தொடர்புகளை பற்றி தம் பாடல்களில் பல உண்மைகளை வெளிப்படுத்துகிறார் பாரதியின் வாழ்க்கையில் மிக மிக மதித்து வந்த செல்வம் மனிதன்தான் அவர் மனிதனை கவிதை கலையின் பீடத்தில் ஏற்றி வைத்தார் இந்த புதிய கலைக்கு பாரதிய முன்னோடியாக திகழ்ந்தார் சமூக தத்துவம் என்ற கருத்தை பாரதி மிகவும் வற்புறுத்தி பாடுகிறார். உயர்ந்தவன் தாழ்ந்தவன் ஏழை பணக்காரன் முதலாளி தொழிலாளி நில உடமைக்காரன் நிலம் இல்லாதவன் என்ற வேறுபாடுகளை தகர்த்து அனைவரும் சமம் என்று கூறுகிறார். தம் காலத்திய இந்தியப் பண்பாடு சமயம் கலை இலக்கியம் ஆகியவற்றைக் கவிதைகளில் வெளிப்படுத்தியவர். மேலும் தமிழ் கவிதைகளில் நவீனத்துவத்தை உள்ளடக்கிய படைப்புகளை முதன் முதலாக அறிமுகம் செய்தவர் மகாகவி. தொன்மை மிக்க பண்பாட்டைக் கொண்ட நாட்டில் வாழ்ந்த பாரதி நமது கவிதைகளில் சமூகப் பண்பாட்டு வளர்ச்சி பற்றி அதிகமாக சிந்தித்துள்ளார். இவரின் படைப்புகளில் இடம்பெற்றுள்ள கவிதைகளில் சமகாலச் சமுதாயம் குறித்து வெளிப்பட்டு உள்ள கருத்துகள் குறித்து கீழ்க்கண்ட தலைப்புகளைப் பற்றி இக்கட்டுரை ஆராய முற்படுகின்றது.

1. சமூக விழிப்புணர்வு
2. சமூக சமத்துவம்
3. சமூக ஒருமைப்பாடு
4. சமூக மாற்றம்
5. சாதிக் கொடுமைகள்
6. பெண்கள்முன்னேற்றம்
7. கல்வி

*examine the following topics in relation to the ideas expressed in contemporary society in the poems of his works.*

1. *Social Awareness*
2. *Social equality*
3. *Social Integration*
4. *Social change*
5. *Caste Atrocities*
6. *Women's Empowerment*
7. *Education.*

**Citation**

Sengottuvel, R. “Contemporary Society Reflected in Bharathiar Poems.” *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 3, 2024, pp. 48–55.

**சமூக விழிப்புணர்வு**

*பாரதி வாழ்ந்த காலத்தில் இந்திய நாட்டில் தேசிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருந்தது. தேசிய விழிப்புணர்வின் காரணத்தால் சுதந்திரப் போராட்டத்தில் மக்கள் அதிக அளவில் ஈடுபடலாயினர். 19-ஆம் நூற்றாண்டின் மத்தியில் தான் இந்தியாவின் பல தேசிய இன மொழிகளின் இலக்கியங்கள் உருவாக்கத் தொடங்கியது. பாரதி தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் சமூக விழிப்புணர்வினை உண்டாக்கத் தம் கவிதைகளைக் கருவியாகப் பயன்படுத்திக் கொள்கிறார்.*

***"ஊருக்கு நல்லது சொல்வேன் எனக்***
***குண்மை தெரிந்தது சொல்வேன்"[1]***

*என்று கூறுவதிலிருந்து சமூக விழிப்புணர்வில் பாரதி கொண்டிருந்த ஈடுபாடு புலனாகிறது.*

***"அறிவு வளர்த்திட வேண்டும் - மக்கள்***
***அத்தனை பேருக்கும் ஒன்றாய்"[2]***

*என்று கூறுவது பாரதியின் சமூக சிந்தனையைக் காட்டுகிறது. மக்கள் மத்தியில் சமூக விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் "புதிய ஆத்திச்சூடி"யில் புதிய அறக் கருத்துக்களையும் சமூகச் சிந்தனைகளையும் கூறுகின்றார்.*

***"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்-வீணில்***
***உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்.***
***விழலுக்கு நீர் பாய்ச்சி மாயமாட்டோம் - வெறும்***
***வீணருக்கு உழைத்துடலம் ஓயமாட்டோம்"[3]***

*என்று கூறுவதிலிருந்து சமூக விழிப்புணர்வுடன் கூடிய சமூக வளர்ச்சியை எடுத்துரைக்கின்றார் பாரதியார். "பாரதி தமிழரைப் பற்றியும் அடிமைப்பட்ட நாட்டைப் பற்றியும் சிந்தித்து இருப்பதைக் கவிதைகளின் வழி ஒப்பு நோக்கத்தக்கதாகும்.*

*பாரத ஜனங்களின் "தற்கால நிலைமை" என்ற பாடலில் அறியாமையில் மூழ்கிக் கிடந்த மக்களின் நிலைமைகளை எடுத்துரைத்து அவர்களது அறியாமையை எடுத்துக்காட்டி அதற்குரிய தீர்வினைத் தம் கவிதைகளில் சொல்லிச் சமூக விழிப்புணர்வினை உண்டாக்குகிறார்.*

***"எண்ணிலா நோயுடையார் - இவர்***
***எழுந்து நடப்பதற்கும் வலிமையிலார்***
***கண்ணிலா குழந்தைகள் போல் - பிறர்***
***காட்டிய வழியிற் சென்று மாட்டிக்கொள்வார்"[4]***

*என்று அப்போது மக்கள் இருந்த நிலையைப் பற்றி கூறுகின்றார். நாட்டு மக்களுக்கு சமூக விழிப்புணர்வை ஊட்டுவதற்காகவும் அவர்களை ஒன்று திரட்டுவதற்காககவும் பாரதியார் தமது கவிதையைக் கருவியாக பயன்படுத்திக் கொள்கிறார்.*

*"பாரதியார் கவிதைகள் படிப்பவருக்கும், கேட்பவருக்கும், பலம் ஊட்டும் சக்தியாக விளங்குகின்றன. அவை வீழ்ந்து கிடக்கும் மனிதனை நிமிர்ந்து நிற்கச் செய்து எழில் மிகுந்த உலகை உண்மையான மானிட உறவுகள் நிலவும் உலகை ஏறிட்டு நோக்கச் செய்கின்றன"[5] என்ற பாரதியின் கவிதைத் திறம் பற்றி பிற நாட்டு அறிஞர் கருத்துரைக்கின்றனர்.*

**சமூக சமத்துவம்**

*தனிமனிதனைப் பற்றிச் சிந்தித்தவர் பாரதி. தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் உள்ள தொடர்புகளைப் பல நிலைகளில் ஆராய்ந்து தம் பாடல்களில் அவை பற்றிய உண்மைகளை வெளிப்படுத்துகிறார். "பாரதி வாழ்க்கையில் மிக மிக மதித்து வந்த செல்வம் மனிதன்தான்*

*அவனது களிப்பும்தான் கண்ணீரும்தான் அவர் மனிதனைக் கவிதைக்கலையில் பீடத்தில் ஏற்றி வைத்தார். இந்தப் புதிய கலைக்கு பாரதியே முன்னோடியாகத் திகழ்ந்தார்'' சமூக தத்துவம் என்ற கருத்தை பாரதி மிகவும் வற்புறுத்திப் பாடுகின்றார். உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை, பணக்காரன், முதலாளி, தொழிலாளி, நில உடைமைக்காரன், நிலமில்லாதவன் என்ற வேறுபாடுகளைத் தகர்த்து அனைவரும் ''சமம்'' என்று அறைகூவல் விடுக்கின்றார்.*

***எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்***
***எல்லாரும் இந்திய மக்கள்''[6]***

*எனப் பாடுகிறார். நல்ல சமுகம் அமைய ''சமூக சமத்துவம்'' அடிப்படை என்பது பாரதியின் கொள்கையாகும்.*


*விடுதலை சுதந்திரப்பள்ளு ஆகிய இவ்விரு கவிதைகளும் பாரதியின் சமத்துவக் கொள்கையினை அறிந்துகொள்ள உதவுகின்றன. சமூகத்தில் கடைநிலையில் வாழும் மனிதனும் சமத்துவம் பெறவேண்டும் என்கிறார் பாரதியார்.*

***ஏழையென்றும் அடிமையென்றும்***
***எவனும் இல்லை ஜாதியில்''[7]***

*என்று பாடுகின்றார். இழிவு கொண்ட மனிதர்கள் இந்தியாவில் நடைமுறை வாழ்வில் இருந்த போதும் இந்நிலை மாற்றம் அடைய வேண்டும் என்ற நோக்கில் தம் கவிதையில் இல்லையென்கிறார். சமூக சமத்துவத்தால் தான் மனிதன் உயர்வு பெற்று மகிழ்ச்சியாகவும் ஒற்றுமையாகவும் வாழ முடியும் என்கிறார். இச்சிந்தனை மரபானது பாரதியாரின் அரசியல் தொடர்பு சர்வதேச சிந்தனையாளர்களின் தாக்கம் உலகில் அவ்வப்போது தோன்றி வரும் மாற்றங்களின் வழித் தோன்றியிருப்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றது.*

*சமூக சமத்துவம் இந்தியமண்ணில் வேர்விட்டு வளருகின்ற போக்கை உணர்ந்து ''தந்திரப்பள்ளு''வில் உற்சாகமாகப் பாடுகின்றார். இந்திய மண்ணில் மலர்ந்து சமத்துவப் போக்கை உலகோர் அறியும் வண்ணம் எடுத்துக்கூறவேண்டும். என்கிறார். இந்திய சமத்துவத்தை உலக சமத்துவப் பார்வையுடன் தொடர்புபடுத்திப் பாடுகிறார். சமத்துவ சமுதாயம் உருவாகிக் கொண்டு வருவதனால் நாட்டை சீர்குலைத்துக் கொண்டு வந்த ''கெட்ட நயவஞ்சக்காரருக்கு நாசம் வந்ததே'' என்று உற்சாகத்துடன் பாடுகின்றார்.*

*சுதந்திரம் சகோதரத்துவம் சமத்துவம் ஆகிய இம்மூன்றும் பண்பாட்டின் மூன்று கூறுகள் ஆகும். பண்பாடு சிறக்க வேண்டுமாயின் சமூகத்தில் சமத்துவம் விளங்க வேண்டும். அந்த சமத்துவ வாழ்க்கையில் தான் சுதந்திரத்தை முழுமையாக புரிந்து கொண்டு அனுபவிக்க முடியும். அந்தச் சமத்துவ சுதந்திர மண்ணில்தான் சகோதரத்துவம் இயல்பாகப் பூத்துக் குலுங்கும்.*



*இம்மூன்று பண்பாட்டுக் கூறுகளும் பாரதியார் கவிதைகளில் வலியுறுத்தப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.*

***"எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு - நாம்***
***எல்லாரும் சமமென்பது உறுதியாச்சு" 8***

*என்று சமத்துவ சமுதாயம் பற்றிக் குறிப்பிடுகின்றார்.*

**சமுதாய ஒருமைப்பாடு**

*இந்திய நாட்டு மக்களிடம் ஒருமைப்பாட்டுணர்வு தோன்ற பாரதியார் அரும்பாடு பட்டார். ஒற்றுமையினால் தான் விடுதலை பெற முடியும் என்ற உண்மையினை மக்களிடம் எடுத்துரைத்தார். இந்திய நாடு இந்தியப் பண்பாடு இந்திய நாட்டின் ஒருமைப்பாடு பாரதியார் தேசியப் பாடல்களில் அடித்தளமாக அமைந்துள்ளது என்றும் இவரது கவிதைகளில் காதலிலும் வீரத்திலும் கலந்து நிற்பது நாட்டின் ஒருமைப்பாட்டுணர்வே என்பதை*

***"முப்பது கோடி முகமுடையாள் உயிர்***
***மொய்ம்புற வொன்றுடையாள் - இவள்***
***செப்புமொழி பதினெட்டுடையாள் - எனிற்***
***சிந்தனை ஒன்றுடையாள்"[9]***

*என்று ஒன்றுபட்ட முழுமையான இந்தியாவைப் பற்றிப் பாடுகின்றார்.*

***அறுபது கோடி தடக்கைகளாலும்***
***அறங்கள் நடத்தவாள் தாய்[10]***

*என்று பாரத மாதாவின் வலிமையைக் குறிப்பிடுகின்றார்.*

***விதமுறு நின்மொழி பதினெட்டும் கூறி***
***வேண்டியவாறு உனைப்பாடுதும் காணாய்[11]***

*என்று இந்தியாவில் வழங்கும் பதினெட்டு மொழிகளாலும் என் புகழைப் பாடுவோம் என்று கூறுவது பாரதியிடம் ஒருமைப்பாட்டுணர்வைக் காட்டுகிறது.*

***தோமிழைப் பார்முன் நின்றிடுங்கால் கொடுந்துர்கையன்னையவள் தாய்[12]***

*என்று பாரத மாதாவைத் துர்க்கையாக உருவகப்படுத்துகிறார் பாரதியார். பாரதம் தாயைத் துர்கையாக வர்ணிக்கும் படிமம் பண்டைய தாய்த் தெய்வமான கொற்றவையோடு சம்மந்தப்படுத்திப் பார்க்கலாம் என்று கூறுவர். பாரதத்தை தாயாகக் கூறுவது வெறும் உருவகம் மட்டுமன்று இந்திய சமயச் சிந்தனையின் குறியீடாகவும் உலகிற்கே ஒளிதரும் கலங்கரை விளக்காகவும் அமைகிறது என்பார் பிரேமா நந்தகுமார்.[13]*

**சமூக மாற்றம்**

*பாரதி ஒரு கவிஞர் மட்டுமல்லாது சிறந்த சமூகவியல் சிந்தனையாளராகவும் விளங்கியுள்ளார். தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் உள்ள தொடர்புகளை மானிடவியல் ஆய்வாளரைப் போல் கூர்ந்து நோக்கியுள்ளார். தாம் வாழ்ந்த காலத்தில் நிலவிய சமுதாயச் சூழலையும் தான் காண விரும்பிய சமூகம் பற்றியும் தமது பாடல்களில் குறிப்பிடுகின்றார். பாரத ஜனங்களின் தற்கால நிலைமை நடிப்புச் சுதேசிகள் சுயசரிதை முதலிய கவிதைகள் பாரதி காலத்தில் நிலவிய சமூக அமைப்பினையும் சமூக வாழ்நிலைகளையும் வெளிப்படுத்துகின்றன. நெஞ்சில் உரமின்மை நேர்மையின்றி வாழ்தல் கூட்டத்தில் கூடிப் பிதற்றுதல் போன்ற பண்புடையவர்கள் தங்கள் கண்களில் சமூகத்தைப் பார்க்க முடியாதவர்கள் என்று கூறும் கவிஞர் இத்தகையவர்களை அச்சமும் பேதமையும் அடிமைச் சிறுமதியும் உச்சத்தில் கொண்ட*

மக்கள் ஊக்கமும் உள் வலியும் இல்லாத மக்கள் என்று அடையாளப்படுத்துகின்றார். இப்படிப் பட்ட மனிதர்கள் தம் சமகாலத்தில் வாழ்ந்திருந்ததையும் கவிதைகளின் வழிப் பதிவு செய்கின்றார். இந்தியா வெள்ளையர்களின் ஆட்சியில் அடிமைப்பட்டுக் கிடந்த போது பாரத மக்கள் புழுப் போல் துடிப்பதைக் கண்டு மனம் இரங்காதவர்கள் எப்போதும் கைகட்டிக் கொண்டு பூனை போல் ஒடுங்கி நடப்பவர்கள் பொறியற்ற விலங்குகள் போல் வாழ்ந்தார்கள் என்பதையும் விவரிக்கின்றார்.

தமது சொந்த வாழ்க்கை காலனி ஆதிக்கத்தால் எவ்வாறு பாதித்தது என்பதை பாரதி தன் சுயசரிதையில் குறிப்பிடுகின்றார். "ஏன் பிறந்தனன் இத்துயர் நாட்டிலே" என்று பாரதி வேதனையுடன் பாடுகிறார். தனிமனித வாழ்க்கையையும் சமூக வாழ்க்கையும் சிதைத்து போயிருந்தது என்பதை பாரதியின் சுயசரிதை மூலம் அறிய முடிகிறது.

காலனி ஆதிக்கமும் நிலப்பிரபுத்துவக் கொடுமைகளும் ஒழிந்து "புதிய சமூகம்" மலர வேண்டும் என்பது பாரதியின் விருப்பமாகும். நல்ல குடியாட்சி சாதி வேறுபாடற்ற சமூகம் ஆண்-பெண் சமுத்துவம் சமூக சமத்துவம் உணவு உடை முதலிய அடிப்படைத் தேவைகள் எல்லோருக்கும் கிடைத்தல் இப்படி ஒரு சமூகத்தைப் பாரதி காண விரும்பினார் என்பதைப்

**"மண் பயனுற வேண்டும்**
**வாகனமிங்கு தென்பட வேண்டும்"**[14]

பற்றிக் கூறுகின்றார். பாரதி ரஷ்யப் புரட்சியை வரவேற்றுப் பாடியது இந்தியாவில் குடியாட்சி குடிமைநீதி சமூக மாற்றம் ஏற்பட வேண்டுமென்ற நோக்கில்தான். ரஷ்யாவில் நிகழ்ந்த புரட்சியை இந்தியக் கவிஞர்களுள் பாரதியே முன்முதலில் வரவேற்றார்.

**" இடிபட்ட சுவர்போல் கலிவிழுந்தான்**
**கிருதயும் ஏழுகமாதேர்"**[15]

என்று பாடுவது இந்திய நாட்டிலும் புரட்சி ஏற்பட்டு சமூக மாற்றம் ஏற்பட வேண்டும் என்ற பாரதியின் ஆழ்ந்த விருப்பத்தை வெளிப்படுத்துகிறது.

பாரதி பாடிய "அக்கினிக்குஞ்சு" என்ற கவிதை சமூக மாற்றம் பற்றிய பாரதியின் கருத்தினைக் குறிப்பால் உணர்த்தும் கவிதையாகும். "வெந்து தனிந்தது காடு" என்பது தீமை அழிந்தது என்ற பொருளைக் குறிக்கிறது. "அக்கினியைக்" குறியீடாகப் பயன்படுத்தியுள்ளார். பாஞ்சாலி சபதத்தின் முடிவில் "விண்ணைப் பூழிப்படுத்திய தாஞ் சூழற்காற்று" என்ற தொடர் உருக்காட்சி மூலம் இந்தியாவில் ஏற்படப்போகும் சமூக மாற்றம் பற்றிக் கூறுகின்றார்.

**சாதிக் கொடுமைகள்**

சமுதாய முன்னேற்றத்திற்கு சாதிக் கொடுமைகள் பெரும் தடையாக இருக்கின்றது என்பதை உணர்ந்த பாரதியார் சாதி வேறுபாடற்ற சமுதாயம் உருவாகவேண்டும் என்று விரும்புகின்றார். சாதிக் கொடுமைகளை மிகக் கடுமையாக எதிர்த்துச் சாடுகின்றார். பாரதியின் படைப்புக்கள் யாவும் எந்தச் சமூக அநீதிகளையும் சகித்துக் கொள்ளாத மிகவுணர்ந்த சமூகப் பொறுப்புணர்ச்சி மனோபாவத்திலிருந்து பிறந்தவையாகும் என்பதை

**"சாதிகள் இல்லையடி பாப்பா - குலம்**
**தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாவம்"**[15]

என்று குழந்தைகளுக்கு சமூகப் பொறுப்புணர்ச்சியுடன் அறிவுரை கூறுவன குறிப்பிடத்தக்கதாகும்.

சாதிப்பிரிவுகளைச் சொல்லி மக்களை ஏமாற்றி வாழும் நயவஞ்சர்களைக் கண்டிக்கிறார். மக்கள் அத்தனை பேரும் நிகர் என்பதைத் தெளிவாக உறுதியாக நாட்டுக்கு எடுத்துரைக்கின்றார். அன்பின் அடிப்படையில் இவ்வையகம் செழிக்கவேண்டும் என்கிறார். பொய்மைச் சாதி வகுப்பு ஒழிந்தால்தான் சமூக வளர்ச்சி ஏற்படும் என்பது பாரதியின் கொள்கையாகும்.

**பெண்கள் முன்னேற்றம்**

*பெண்ணடிமை பரவலாகக் காணப்பட்ட காலத்தில் வாழ்ந்த பாரதியார் அவர்கள் முன்னேற்றம் பற்றிச் சிந்திக்கின்றார். ஆண்களுக்கு இருக்கும் உரிமைகள் அனைத்தும் பெண்களுக்கும் தரவேண்டும் என்கிறார்.*

***"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்***
***அறிலோங்கி இவ்வையகம் தழைக்குமாம்"***[16]

*என்று பெண்ணுக்கு சம உரிமை வழங்குவதால் சமூக வளர்ச்சி ஏற்படும் என்கிறார்.*

*"மண்ணுக்குள்ளே சில மூடர் நல்ல தாறிவைக் கெடுத்தார்" என்று பெண்கள் முன்னேற்திற்கு எதிராக நிற்பவர்களைக் கடுமையாகச் சாடுகிறார். பெற்ற தாயும் பிறந்த தங்கையும் தமக்கையும் உற்ற துணைவியுமான பெண்ணை அடிமைப்படுத்திய மக்கட்கு வாழ்வில்லை வளர்ச்சியில்லை. அந்த சமுதாயத்தின் எதிர்காலமும் இருள் என்று நம்பினார் பாரதி.*

***"ஆண்களோடு பெண்களும்***
***சரிநிகர் சமானமாக***
***வாழ்வம் இந்த நாட்டிலே"***[17]

*என்று பெண்ணை அடிமைப்படுத்தாமல் ஆணும் பெண்ணும் சம உரிமை பெற்று வாழ்வோம் என்கிறார்.*

**கல்வி**

*சமூக வளர்ச்சிக்கு கல்வி உதவவேண்டும் என்பது பாரதியாரின் கொள்கையாகும். கற்றலில் இன்றியமையாமை பற்றிக் குழந்தைகளிடம் கூறுகின்றார். பெண்கள் கல்வி கற்று நாட்டு முன்னேற்றத்திற்குப் பாடுபடவேண்டும் என்கிறார். வாழ்க்கைக் கல்வி பற்றி பாரதி சிந்தித்துள்ளார். தாய்மொழிக் கல்விதான் நாட்டின் சமூகப் பண்பாட்டு வளர்ச்சிக்கு அடித்தளமாக அமையும் என்பது பாரதியின் கல்விக் கொள்கையாகும்.*

***"பயிற்றுப் பல கல்வி தந்து - இந்தப்***
***பாரை உயர்த்திட வேண்டும்"***[18]

*என்று தொழில்நுட்பக் கல்வி மருத்துவக் கல்வி வேளாண்மைக் கல்வி முதலிய அனைத்துக் கல்வி வசதிகளையும் செய்துகொடுத்து கல்வியின் மூலம் சமூக வளர்ச்சியை உண்டாக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார் பாரதியார்.*

**முடிவுரை**

*பாரதியின் வாழ்க்கையில் தனி மனிதனைப் பற்றிச் சிந்தித்தவர். அவர் வாழ்க்கையில் மிக மிக மதித்து வந்த செல்வம் மனிதர்கள் தான். இந்தியாவில் இருக்கும் எல்லா மொழிளிலும் ஒருமைப்பாட்டு உணர்வை வளர்க்க வேண்டும். பாரதியின் சமுதாய சிந்தனை ஆனது ஒரு குறியீடாகவும் உலகிற்கே ஒளி தரும் கலங்கரை விளக்கமாகவும் அமைந்துள்ளது எனலாம். மேலும் ஜாதி ஒழிந்தால் தான் சமூக வளர்ச்சி ஆனது ஏற்படும் தாய்மொழி கல்வியில் தான் ஒரு நாட்டின் சமூக பண்பாட்டு வளர்ச்சிக்கு அடித்தளமாக அமையும் என்பது மட்டுமல்லாமல் தொழில்நுட்பக் கல்வி மருத்துவக் கல்வி வேளாண்மை கல்வி மற்றும் எல்லா வகையான கல்வியின் மூலம் ஒரு சமூக வளர்ச்சியை காண முடியும் என்று இக்கட்டுரையின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.*

**அடிக்குறிப்புகள்**

1. *மகாகவி பாரதி பற்றிய சோவியத் அறிஞர் ப.13*
2. *பாரதியார் கவிதைகள் ப.25*
3. *மேலது ப.179*
4. *மேலது ப.50*
5. *மகாகவி பாரதி பற்றிய சோவியத் அறிஞர்கள் ப.67*
6. *பாரதியார் கவிதைகள் ப.37*
7. *மேலது ப.49*
8. *டாண்டா நடராசன் பண்பாடு ஒரு வரையறை ப.129*
9. *பாரதியார் கவிதைகள் ப.25*
10. *மேலது ப.68*
11. *மேலது ப.27*
12. *மேலது ப.25*
13. *சுப்ரமணிய பாரதியார் கவிதைகள் பிரேமா நந்தகுமார் ப.15*
14. *மேலது ப.159*
15. *பாரதியார் கவிதைகள் ப.47-176*
16. *பாரதியார் கவிதைகள் ப.180*
17. *பாரதியார் கவிதைகள் ப.50*
18. *மேலது ப.49*

## References


1. Bharathiyar Poems, P.25.
2. Soviet Scholars on Mahakavi Bharati, P. 67.
3. Tanda Natarajan, A Definition of Culture, P.129.
4. Premananda Kumar, Subramania Bharathiyar Poems, P.15.